# இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம், சங்ககிரி
# (சார்பு நீதிமன்றம், சங்ககிரி)

முன்னிலை : திரு. N. பன்னீர்செல்வம், B.A., B.L.,
இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி, சங்ககிரி.

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், மாசித்திங்கள் 21 ம் நாள் வியாழக்கிழமை
2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ம் நாள் வியாழக்கிழமை

இ.வி.கோ.ம.எண். 252/2019

CNR No: TNSA07-000997-2019

செங்கோட்டுவேலு, த/பெ. இராமசாமி, வயது 33,
வசிப்பிடம் எண்.க.எண் 38A, பெரியமாரியம்மன் கோவில் தெரு, கொங்கணாபுரம்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.

.. மனுதாரர்

/எதிராக/

1. செல்வராஜி, த/பெ. மாணிக்கம்,
வசிப்பிடம் க.எண் M2-20M, TNHB காலனி, முருகபண்டாரம் தெரு,
நட்டுவம்பாளையம், சங்ககிரி RS, சங்ககிரி துர்க்கம், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.
2. தி நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
3, மிடில்டன் தெரு, கொல்கத்தா. .. எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 19.02.2026 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு, C. பரணீதரன், திரு.K. சித்தேஷ்வரன் ஆகியோர் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. J.T.ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரரை வாய்தா தேதியில் அழைத்தும், ஆஜராகாததால் அவரை தோன்றாத் தரப்பினராக பதிவு செய்தும், மனுதாரர், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், மனு, எதிருரை, இரு தரப்பு சாட்சியம் மற்றும் மனுக்களின் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள் வரையில் இந்த தீர்ப்பாயத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததுமான இம்மனுக்களில் இன்று இந்த தீர்ப்பாயம் பிறப்பிக்கும்,

## <u>உத்தரவு:-</u>

1) இம்மனுவானது மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்மனுதாரர்கள் 15 லட்சம் ரூபாய் இழப்பீடு கொடுக்க உத்தரவிடக் கோரி மோ.வா.சட்டம் பிரிவு 166 தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாய விதி 3 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம்:</u>

கடந்த 14.06.2019 ஆம் தேதியன்று பகல் சுமார் 11.15 மணியளவில் மனுதாரர் **TN** 52 **F** 2653 ( **TVS WEGO – Scooter/Moped**) என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தை தலைக்கவசம் அணிந்துக்கொண்டு பவானி - சங்ககிரி ரோட்டில் சங்ககிரி **Axis Bank** அருகே ரோட்டின் இடதுபுற ஓரமாக ஓட்டிச்சென்ற போது, மேற்படி ரோட்டை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி **TN** 52 **M** 8880 (**Hero Pleasure – M- Cycle Scooter**) என்ற பதிவெண் கொண்ட வண்டியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரரின் வாகனத்தின் மீது மோதியதில், மனுதாரர் கீழே விழும்போது தலைக்கவசம் கழன்று கீழே விழுந்ததில் பின்தலையில் பலத்த அடிபட்டு இரத்தகாயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் சங்ககிரி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைப் பெற்று பின்பு சேலத்தில் உள்ள நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விபத்தின் போது மனுதாரருக்கு வயது 33 மற்றும் மனுதாரர் விபத்தின்போது கொங்கணாப்புரத்தில் சொந்தமாக இருசக்கர வாகனங்களை வாடகைக்கு நிறுத்தும் **Cycle Stand** மூலம் ரூ.15,000/- சம்பாதித்து வந்தார். விபத்தினால் மனுதாரரால் முன்பு போல் தொடர்ந்து வேலை செய்ய முடியவில்லை. ஆகவே, எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.15,00,000/- கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>2 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

மனுவில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று மனுதாரரின் காயத்தன்மை, விபத்திற்கு முந்தைய உடல் திறன், விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு அளிக்கப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் ஆகியவற்றை மனுதாரரே ஆவணபூர்வமாக மெய்பிக்க வேண்டுமென்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானவை என்றும், 1 ம் எதிர்மனுதாரர் விபத்து குறித்த சங்கதிகள் குறித்து 2 ம் எதிர்மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றும், இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரையும், மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தையும் மனுவில் அவசிய தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் இம்மனு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், இம்மனு 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை அதிகமானது என்றும், ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

4) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,</u>

1) இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?
2) மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார் ?
3) மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுள்ளவரா, அவ்வாறெனில் அவருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கத்தக்கது ?

5) மனுதாரர் செங்கோட்டுவேலு மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து குறித்த சங்கதிகளை நிரூபிக்க ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, ம.சா.1 ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் 12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், மருத்துவ குழு மனுதாரருக்கு வழங்கிய ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விபத்து வழக்கினை சங்ககிரி காவல் நிலைய சரக காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.191/2019 ம.சா.ஆ.1 ஆகும். விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இல்லை. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

6) <u>பிரச்சனை எண் 1 க்கான தீர்வு:</u>

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர் செங்கோட்டுவேலு ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 14.06.2019 ஆம் தேதியன்று பகல் சுமார் 11.15 மணியளவில் தான் TN 52 F 2653 ( TVS WEGO – Scooter/Moped) என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தை தலைகவசம் அணிந்துக்கொண்டு பவானி - சங்ககிரி ரோட்டில் சங்ககிரி Axis Bank அருகே ரோட்டின் இடதுபுற ஓரமாக ஓட்டிச்சென்ற போது, மேற்படி ரோட்டை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 52 M 8880 (Hero Pleasure – M-Cycle Scooter) என்ற பதிவெண் கொண்ட வண்டியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கரதையாகவவும் ஒட்டி வந்து வாகனத்தின் மீது மோதியதில், தான் கீழே விழும்போது தலைக்கவசம் கழன்று கீழே விழுந்ததில் பின்தலையில் பலத்த அடிபட்டு இரத்தகாயம் ஏற்பட்டதாகவும் பின்பு சங்ககிரி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைப் பெற்று மேல்சிகிச்சைக்காக சேலத்தில் உள்ள நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டதாகவும், அங்கு தனக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாய்மொழி சாட்சியத்தை மறுத்துரைக்கும் விதமாக 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியங்களோ அல்லது ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், 1ம் எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராக இருந்து வருகிறார். ம.சா.1 ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2 குற்ற பத்திரிக்கை,

ம.சா.ஆ.3 மாதிரி வரைப்படம், ம.சா.ஆ.4, ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது இந்த வழக்கில் விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

7) பிரச்சனை எண் 2 க்கு தீர்வு:

விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் தான் என்று தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், இம்மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை செலுத்த வேண்டிய பொறுப்பு எந்த எதிர்மனுதாரர்களுக்கு உள்ளது என்பது குறித்த நாம் இங்கு பரிசீலிக்க வேண்டியுள்ளது. சம்பவத்திற்கு காரணமான TN 52 M 8880 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.சா.ஆ.4 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை மூலம் அறியப்படுகிறது. மேலும், மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.10 ஆவணத்திலிருந்து தெரிய வருகின்றது. மேற்படி வாகனத்திற்கான காப்பீடு 22.08.2018 முதல் 21.08.2019 வரை அமலில் இருந்துள்ளது மேற்கண்ட ஆவணத்தின் மூலம் அறியப்படுகிறது. விபத்து தேதியான 14.06.2019 அன்று விபத்திற்கு காரணமான வாகனத்திற்கு செல்லும்படியானதக்க காப்பீடு அமலில் இருந்து வந்துள்ளதும் தெரிய வருகிறது.

8) இருப்பினும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது விபத்து ஏற்படுத்திய போது அந்த வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் மைனர் என்றும் அவருக்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றும், இதிலிருந்து 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிபந்தனைகளை மீறியுள்ளார் எனவும், காப்பீட்டு விதிமுறைகளின்படி 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் இழப்பீடு கோர முடியாது என்றும் குறிப்பாக வாதம் முன்வைத்துள்ளதோடு, எ.ம.சா.1 ஆக காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியாக பணிபுரியும் ஒரு சண்முகம் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இதிலிருந்து 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிபந்தனைகளை மீறியுள்ளார் என 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டுள்ளதால் காப்பீட்டு நிபந்தனைகளின் படி 1ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய இழப்பீட்டு தொகையை ஈடு செய்யும் பொறுப்பு 2ம் எதிர்மனுதாரருக்கு இல்லை. எனினும், மனுதாரருக்கு சேர வேண்டிய இழப்பீட்டு தொகை உடனடியாக கிடைக்காமல் போக வாய்புள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு சேர வேண்டிய இழப்பீட்டு தொகையை செலுத்திவிட்டு அதை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்து கொள்ள வேண்டும் என இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9) <u>பிரச்சனை எண் 3 க்கு தீர்வு:</u>

இந்த மனுவில் மனுதாரர் செங்கோட்டுவேலு தனக்கு ஏற்பட்ட காயங்களை மெய்பிக்க ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டதோடு, மேற்படி வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்திலிருந்து மனுதாரருக்கு தலையிலும் பலத்த அடிப்பட்டு சிகிச்சை பெற்றது தெரிய வருகின்றது. மனுதாரர், சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் 14.06.2019 முதல் 01.07.2019 வரையில் சிகிச்சை பெற்றுள்ளது ம.சா.ஆ.8 மருத்துவமனை விடுவிப்பு குறிப்பிலிருந்து தெரிய வருகிறது. மனுதாரர் மருத்துவ குழுமத்திற்கு முன்பு ஆஜராகி பெற்ற ஊன சான்றானது இந்த தீர்ப்பாயத்தில் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஊன சான்றில் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவு 5% எனவும், அது நிரந்தர ஊனம் என சான்று வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2020 (1) TN MAC Page 617 “M.Chinathambi – Vs – S.Deepa (2) National Insurance co., Ltd., Namakkal” எனும் வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் படி 2015 க்கு பிறகு ஏற்பட்ட விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.5,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது. மனுதாரருக்கு ஊன சதவிகிதமாக 5% நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மேற்கூறிய மொழிந்துரையின் படி (5 x ரூ.5,000/-) ரூ.25,000/- மனுதாரருக்கு காயத்திற்கான இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

10) மனுதாரர் தனக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ. 1,00,000/- கோரியுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களானது கொடுங்காயம் என ம.சா.ஆ.6 காய சான்றிதழிலிருந்து தெரிய வருகின்றது. எனவே, அவர் வாழ்நாள் முழுவதும் சிரமத்தை அனுபவிக்கும் சூழ்நிலையில் உள்ளதால், அவருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.30,000/- இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

11) மனுதாரர் போக்குவரத்து செலவுக்காக ரூ.50,000/- கோரியுள்ளார். மனுதாரருக்கு விபத்தின் காரணமாக கொடுங்காயம் ஏற்பட்டதால், சிகிச்சைக்காக மருத்துவமனை சென்று, வர ஏற்பட்ட போக்குவரத்து செலவினத்திற்காக ரூ.20,000/- இழப்பீடாக வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது.

12) மனுதாரர் ஊட்டச்சத்திற்காக ரூ.50,000/- கோரியுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவர் ஊட்டச்சத்து மிக்க உணவு எடுத்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் ஊட்டச்சத்திற்காக ரூ.20,000/- இழப்பீடு பெற அருகதையுடையவர் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

13) மனுதாரர் சிகிச்சையின் போது மருத்துவ செலவினத்திற்கென ரூ.1,35,041/- + ரூ.42,530/- = ரூ.1,77,571/- செலவழித்து உள்ளதாக ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.11 மருத்துவ ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரருக்கு மருத்துவ செலவினத்திற்கென ரூ.1,77,571/- கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

14) மனுதாரர் விபத்தின்போது கொங்கணாப்புரத்தில் சொந்தமாக இருசக்கர வாகனங்களை வாடகைக்கு நிறுத்தும் Cycle Stand மூலம் ரூ.15,000/- சம்பாதித்து வந்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அந்த வருமானத்திற்கு ஆதரவாக எந்த சான்றாவணங்களையும் தாக்கல் செய்ய தவறியுள்ளதால், மனுதாரரின் வயது மற்றும் தொழில் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும் போது மனுதாரர் மாதம் ரூ.9,000/- வருமானம் ஈட்டியிருக்க கூடும் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது. மனுதாரர் தனக்கு ஏற்பட்ட கொடுங்காயத்தின் காரணமாக மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்திருந்ததால், அவர் சுமார் 3 மாதங்கள் வேலைக்கு சென்றிருக்க இயலாது. எனவே, விபத்து சமயத்தில் அவர் வேலை செய்யாததற்கு ஏற்பட்ட வருமான இழப்பீடாக 3 x ரூ. 9,000/- = ரூ.27,000/-கொடுக்கலாம் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

15) ஆகவே, மேற்படி பரிசீலினையின் அடிப்படையில் மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீடு வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

**<u>கணக்கீடு</u>**

| | | |
|---|---|---|
| ஊனத்திற்கான இழப்பீடு | | ரூ. 25,000.00 |
| வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு | | ரூ. 30,000.00 |
| போக்குவரத்து செலவினம் | | ரூ. 20,000.00 |
| ஊட்டச்சத்து | | ரூ. 20,000.00 |
| வருமான இழப்பு | | ரூ. 27,000.00 |
| மருத்துவ செலவினம் | | ரூ. 1,77,571.00 |
| | மொத்தம் | ரூ. 2,99,571.00 |

16) ஆகவே, மனுதாரருக்கு மேற்கண்டவாறு ரூ. 2,99,571/- மட்டும் இழப்பீடாக பெற உரிமையுடையவர் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

17) இறுதியாக,

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டும்,

2. ரூ. 2,99,571/-(ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐநூற்றி எழுபத்து ஒன்று) ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக

மனுதாரருக்கு 2 ம் எதிர்மனுதாரர் வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டுமென்றும்,

3.இழப்பீட்டு தொகையை காப்பீட்டு நிறுவனம் என்ற அடிப்படையில் 2 ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்திவிட்டு, 1 ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ளலாம் என்றும்,

4.மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

5. இந்த இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் நாள் முதல் 7.5% வட்டி செலுத்த வேண்டுமென்றும், 2 ம் எதிர்மனுதாரர் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றம், கணக்கு எண் : 42830274259, IFSC எண் SBIN0000994 என்ற வங்கி கணக்கில் NEFT/RTGS முறையில் நேரடி வங்கி மாற்றம் மூலம் செலுத்த வேண்டுமென்றும்,

6. 2 ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தவுடன், இழப்பீட்டு தொகை முழுவதையும் வட்டியுடன் மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கியும்,

7. வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 8991/- நிர்ணயிக்கப்பட்டும்,

8. இம்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.20/-ஐ மட்டும் செலுத்தியிருக்கிறார். மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த இடைமனு எண் 1/2019 தாக்கல் செய்து உத்தரவு நாள் 16.12.2019 ன் படி விலக்கு பெற்றிருப்பதால், மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.2368/-ஐ மனுதாரர் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும்,

9. மாண்புமிகு சென்னை,உயர்நீதிமன்ற உத்தரவு எண். C.R.P No. 1343 of 2012 நாள்:02.04.2016 MD TSTC Salem Ltd., /Vs/ Chinnadurai என்ற இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின் படி 2 ம் எதிர்மனுதாரர் TDS க்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANNEERSELVAM N

Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.05 19:03:13 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

மற்ற விபரங்கள்

| | |
|---|---|
| மனு தாக்கலான தேதி | 16.12.2019 |
| உத்தரவு நாள் | 05.03.2026 |
| இழப்பீட்டுத்தொகை | ரூ. 2,99,571/-(ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணுற்று ஒன்பதாயிரத்து ஐநூற்றி எழுபத்து ஒன்று மட்டும்) |
| வட்டி விகிதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காலம் | மனு தேதியான 16.12.2019 லிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை (தவறுகையினால் மனு தள்ளுபடி ஆகியிருந்த காலங்கள் தவிர்த்து) ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் இம்மனுவின் செலவுத் தொகையும் சேர்த்து இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும். |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | ரூ. 2368/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | ரூ. 20/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ. 2348/- |
| நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம் | மனுதாரர் இம்மனுவிற்காக செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ. 2348/-ஐ உத்தரவு தேதியான 05.03.2026 லிருந்து 15 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் |
| அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை | ரூ. 11,688/- |
| மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா | இல்லை |

செலவுத்தொகைப் பட்டியல்

| மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 2368 | 00 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| சான்றாவண கட்டணம் | 50 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 8991 | 00 |
| கட்டளை சார்வு கட்டணம் | 69 | 00 |
| எழுத்துக்கூலி | 200 | 00 |
| மொத்தம் | 11,688 | 00 |

(இம்மனுவின் செலவுத்தொகையான ரூ. 11,688/- ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

PANNEERSELVAM N
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.05 19:03:30 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

இணைப்பு:-

(1) மனுதாரர் தரப்பு சாட்சிப்பட்டியல்-

ம.சா.1 .. திரு. செங்கோட்டுவேலு

(2) எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிப்பட்டியல் -

எ.ம.சா.1 .. திரு. சண்முகம், நிர்வாக அலுவலர்,
நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

(3) மனுதாரர் தரப்பு சான்றாவணப்பட்டியல் -

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 .. | சங்ககிரி காவல் நிலைய குற்ற எண். 191/2019 ன் முதல் தகவல் அறிக்கை | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 .. | சங்ககிரி காவல் நிலைய குற்ற எண் 191/2019 என்ற குற்ற வழக்கின் குற்ற பத்திர்க்கை காவல் துறையின் இணைய தள பதிவிறக்க நகல். | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 .. | சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.191/2019 என்ற குற்ற வழக்கின் மாதிரி வரைபடம் காவல் துறையின் இணையதள பதிவிறக்க நகல். | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 .. | TN 52 M 8880 ( Hero Pleasure – M-Cycle / Scooter) என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை காவல் துறையின் இணையதள பதிவிறக்க நகல். | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 .. | TN 52 F 2653 (TVS WEGO Scooter/Moped) என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆயவறிக்கை காவல் துறையின் இணையதள பதிவிறக்க நகல். | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 .. | காயச்சான்றிதழ் | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 .. | விபத்து பதிவேடு- காவல்துறையின் பதிவிறக்க நகல். | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 .. | மருத்துவமனை விடுப்பு குறிப்பு (Discharge Summary) | - அசல் |
| ம.சா.ஆ.9 .. | சிகிச்சை பெற்றதற்கான மருத்துவமனை பில்கள் | - அசல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.10 .. | TN 52 M 8880 ( Hero Pleasure – M-Cycle / Scooter) என்ற வாகனத்தின் பாலிசி | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.11 .. | சிகிச்சை பெற்றதற்கான மருத்துவமனை பில்கள், | - அசல் |
| ம.சா.ஆ.12 .. | Lab அறிக்கைகள் | - அசல் |

(4) <u>மனுதாரர் தரப்பு சான்றாவணப்பட்டியல்</u> -

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 .. | TN 52 M 8880 ( Hero Pleasure – M-Cycle / Scooter) என்ற வாகனத்தின் பாலிசி | - சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 .. | வழக்கறிஞர் அறிவிப்பு | - அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.3 .. | அஞ்சலக இரசீது | - அசல் |

(5) <u>சாட்சிதரப்பு சான்றாவணப்பட்டியல் - இல்லை</u>

(6) <u>நீதிமன்றதரப்பு சான்றாவணப்பட்டியல் -</u>

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | ஊன சான்று | -அசல் |

PANNEERSELVAM N

Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.05 19:03:43 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

<u>குறிப்பு:-</u>

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020 ம் தேதி Tr.C.M.P. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //Vs// Mr.Ayyannar.S and Other என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இந்த உத்தரவில் இணைக்கப்பட்டுள்ளன.